### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றும் நடைமுறைப்படுத்திவரும் மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கான

# 20% இட ஒதுக்கீடுகளால் வன்னியப் பெருமக்களே அதிகம் பயன்பெறுகின்றனர்!

## தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் நிரூபணம்!

சென்னை, ஆக. 5–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் நடைமுறைப்படுத்திவரும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்க்கான 20 சதவிகித இட ஒதுக்கீடுகளால்தான் வன்னியப் பெருமக்கள் அதிகமாக பயன் பெறுகிறார்கள் என்பது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியம், அனைத்திலும் வன்னியர் சமுதாய இளைஞர்களே அதிகம் தேர்ச்சி பெறுகின்றனர்!**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் அரசு திட்டங்களால் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் புதிய புதிய திட்டங்களை நடைமுறைபடுத்தியுள்ளார்கள். தமிழ்நாட்டில் பெரும்பான்மையினராக உள்ள சில குறிப்பிட்ட பிரிவினர் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபினர் எனும் ஒரு பிரிவை உருவாக்கி அவர்கள் பயன்பெறும் வகையில் 20 சதவிகித இட ஒதுக்கீடுகளை 1989ஆம் ஆண்டில் வழங்கினார்கள்.

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த 20 சதவிகித இட ஒதுக்கீட்டினை இன்றும் முக்கியத்துவம் அளித்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அந்த இட ஒதுக்கீட்டு முறை வன்னிய சமுதாய இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கும், மருத்துவம், பொறியியல் கல்லூரிகள் முதலான தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயன் பெறுவதற்கும் அதிக அளவில் வழிவகுத்துள்ளது. இதனை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியாகியுள்ள புள்ளி விவரங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

**மருத்துவப் படிப்புகளில் அதிக எண்ணிக்கையில் சேரும் வன்னிய சமுதாய இளைஞர்கள்!**

2018 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளுக்கு மொத்தம் 24,330 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவிகித இட ஒதுக்கீடுகள் மூலம் 4,873 மாணவர்கள் தேர்வானார்கள். இவர்களில் வன்னியர் சமுயதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 2,781 மாணவர்கள். இது 11.4 சதவிகிதமாகும். வன்னியர் தவிர்த்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் 5.8 சதவிகித மாணவர்கள் அதாவது 1,414 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 20 சதவிகித பிரிவில் எஞ்சிய சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 678 பேர்.

2018-2022 ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் சேர்ந்த மாணவர்கள் விவரங்களை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெளியிட்டு, வன்னியர்களுக்கு மட்டும் தனி இட ஒதுக்கீடு வழங்கிடக் கோருவது நியாயமானதே என்றனர். உண்மையில் தமிழ்நாடு அரசு வழங்கிவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டில் வன்னியர்கள் 10.5. சதவீதத்தனை விட கூடுதலாக 13.8 சதவிகிதம் அதாவது 3,354 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

**முத்தமிழறிஞர் கலைஞர் தந்த 20 சதவிகித இட ஒதுக்கீடுகளால் -**

**பா.ம.க.கோரும்10.5சதவிகிதத்தைவிடஅதிகம்வன்னியர்கள்பயன்பெற்றுள்ளனர்!**

**மருத்துவ பட்ட மேற்படிப்பு!**

மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான மொத்த மாணவர்கள் சேர்க்கை இடங்கள் 6,966. இதில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் 1,363 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் வன்னிய சமுதாய மாணவர்கள் மட்டும் 940 பேர் சேர்க்கை பெற்றுள்ளனர். இது 10.5 சதவிகிதத்தினைவிட கூடுதலாக 13.5 சதவிகித வன்னிய மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர் என்பதை தெளிவுபடுத்துகிறது.

**பல் மருத்துவக் கல்லூரிகளில் வன்னிய மாணவர்கள் சேர்க்கை!**

பல் மருத்துவக் கல்லூரிகளில் பி.டி.எஸ். பட்டப் படிப்பில் உள்ள மொத்தம் 6,234 இடங்களில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினருக்கான இடங்கள் 933. இதில் வன்னியர்கள் 437 பேர். இது 10.7 சதவிகிதமாகும்.

பல் மருத்துவக் கல்லூரிகளில் எம்.டி.எஸ். பட்டப் படிப்பில் உள்ள மொத்த இடங்கள்751. இவர்களில்மிகவும்பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 137 பேர் பல் மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 66 பேர். இது மொத்த இடங்களில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின்படி 11.2 சதவிகிதமாகும்.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற வன்னியர்கள்!**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் குரூப்4 தேர்வுகளில் 2012 2022 வரை தேர்ச்சி பெற்று நியமனம் பெற்றவர்கள் 26,784 பேர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 5,215 பேர். இது மொத்தம் தேர்ச்சி பெற்றவர்களில் வன்னியர்கள் மட்டும் 19.5 சதவிகிதமாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் குரூப்2 தேர்வுகளில் மொத்தம் தேர்ச்சி பெற்று நியமனம் பெற்றவர்கள் 2,682 பேர். இவர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினரில் மொத்தம் தேர்ச்சி பெற்றோர் 366 பேர். இவர்களில் 20 சதவீதத்தில் இட ஒதுக்கீட்டின் கீழ் பயனடைந்த வன்னியர்கள் மட்டும் 270 பேர். இது மொத்த நியமனங்களில் 11.2 சதவிகிதமாகும்.

**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் நியமன வாரியம்!**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் நியமன வாரியத்தின் கீழ் 2013-2022ஆம் ஆண்டுகளில், 1,919 பேர் காவல் உதவி ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில், மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் 605 பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 327 பேர். அதாவது 17 சதவிகிதத்தினர். இது பாட்டாளி மக்கள் கட்சி கோரும் 10.5 விழுக்காட்டைவிட அதிகம் அல்லவா.

***2018-2022** ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் சேர்ந்த மாணவர்கள் விவரங்களை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெளியிட்டு, வன்னியர்களுக்கு மட்டும் தனி இட ஒதுக்கீடு வழங்கிடக் கோருவது நியாயமானதே என்றனர். உண்மையில் தமிழ்நாடு அரசு வழங்கிவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டில் வன்னியர்கள் 10.5. சதவீதத்தனை விட கூடுதலாக 13.8 சதவிகிதம் அதாவது 3,354 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.*

**உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!**

இதேபோல், 2013 மற்றும் 2022 க்கு இடையில் தமிழ்நாடு மருத்துவ சேவை நியமன வாரியத்தினால் பணியமர்த்தப்பட்ட 8,379 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களில், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் 1,433 பேர் நியமனம் பெற்றனர். இவர்களில் வன்னியர்கள் 1,185 பேர். ‘இது மொத்த நியமனங்களில் 17.1 சதவிகிதமாகும்.

**மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வன்னியர்கள்!**

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்ட 3,044 முதுநிலை ஆசிரியர்களில் 17.5 விழுக்காடு ஆசிரியர்கள், அதாவது 383 பேர் வன்னியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

**துணை ஆட்சியர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!**

2023ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் நியமிக்கப்பட்ட 542 துணை ஆட்சியர்களில், 63 பேர் அதாவது 11.6 சதவிகிதத்தினர் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

**ஒருங்கிணைந்த பொறியாளர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!**

2013 முதல் 2022 வரை 1,789 பொறியாளர்கள் நியமிக்கப்பட்டதில் 258 பேர் வன்னிய சமுதாயத்தினர். இது மொத்த நியமனங்களில் 14.4 சதவிகிதமாகும்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ள புள்ளி விவரங்கள் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் எனும் புதிய பிரிவை உருவாக்கி 20 சதவிகிதத்தை இட ஒதுக்கீடுகளை வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்று வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் நடைமுறைப்படுத்தி வருகின்ற மிகப்பிற்படத்தப்பட்டோருக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழ் வன்னிய சமுதாயத்தினர் அதிகமாகவே பயனடைந்து வருகின்றனர் என்பதும், பாட்டாளி மக்கள் கட்சி கோருகின்ற 10.5 சதவிகித இட ஒதுக்கீடுகளால் வன்னிய சமுதாயத்திற்கு குறைவான பயன்களே கிடைக்கின்றன என்பதும் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

இவ்வாறு தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.

---

### கிராமச் சாலைகள் – தேசிய நெடுஞ்சாலைகள் –

# சென்னை பெருநகரச் சாலைப்பணிகள் - திட்டங்கள் அலகு பணிகள்!

## இரண்டாவது நாளாக அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்!



சென்னை, ஆக.5-

“கிராமச்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், சென்னை பெருநகரச்சாலைப் பணிகள், திட்டங்கள் அலகு ஆகியவற்றின் பணிகளை” இரண்டாவது நாளாக இன்றும் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு, தேசிய நெடுஞ்சாலை அலகு, திட்டங்கள் அலகு, சென்னை பெருநகர அலகு ஆகிய நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு பிரிவுகளில் நடைபெறும் பணிகளையும், புதியதாக தொடங்கப்பட வேண்டிய பணிகளையும், நேற்று (03.08.2024) சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பயிற்சி கூட்ட அரங்கில் ஆய்வு செய்து, அனைத்து அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மழைக்காலங்களில், நெடுஞ்சாலைகளில் பொது மக்கள் இடையூறு இல்லாமல் பயணம் மேற்கொள்ளும் வகையில் சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்று, அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

2,786 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூ.3,056 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு, இதர மாவட்டச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், 605 கிலோ மீட்டர் நீளமுடைய ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூ.675 கோடி மதிப்பீட்டில், மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், இச்சாலைகளைத் தரமுடையதாக அமைக்க வேண்டும். தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், இச்சாலைகளின் தரத்தினை ஆய்வு செய்ய வேண்டும் மற்றும் ஏதாவது குறைபாடு இருந்தால், நடவடிக்கை எடுக்க தயங்கக்கூடாது என்று உத்தரவிட்டார்.

கிராமச் சாலைகள் தரமானதாக இருக்க வேண்டும். “தரமே தாரக மந்திரம்“ என்பதை மனதில் கொண்டு பணியாற்ற வேண்டும். கிராமச் சாலைகள் எங்கெல்லாம் மழைநீரால் பாதிப்பு ஏற்படும் என்பதை முன்னரே கண்டறிந்து, சாலைகளைப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றில் நீர் நிலைகள் நிரம்பி வழியும் நிலை ஏற்படும்போது, சாலைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 381 பாலங்கள், ரூ.1,777 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைப்பெற்று வருகிறது. இப்பாலங்களின் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்றும், தேசிய நெடுஞ்சாலை மூலம் 176 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், நிலுவையில் உள்ள பணிகள் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் நிலஎடுப்பு மற்றும் பணி முன்னேற்றம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து போதிய நிதியைப் பெற்று நிலுவையிலுள்ள பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

திட்ட மதிப்பீடு சரியானதாக இருக்க வேண்டும். திருத்திய நிர்வாக அனுமதி (Revised Administrative Sanction) கோருவதை இயன்றவரைதவிர்க்கமுன்கூட்டியே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சென்னை பெருநகர அலகு மூலம் சென்னையில் நடைபெறும் அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்ட அமைச்சர், கிழக்குக் கடற்கரைச் சாலை, தாம்பரம் கிழக்குப் புறவழிச்சாலை மற்றும் மத்திய கைலாஷ் மேம்பாலப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, இச்சாலைப் பணிகளின் காலதாமதத்தை தவிர்க்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், உதவிப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆகியோர் திட்டச் செயல்பாடு குறித்து, ஒன்றுகூடி விவாதிக்க வேண்டும். விடுபட்ட சாலைகளைக் கண்டறிந்து அவற்றையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

70க்கும் மேற்பட்ட பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதில், திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆம்பூர் மேம்பாலங்களில் நீண்டநாட்களாக முடிக்கப்படாமல் இருப்பதால் அப்பணிகளை விரைந்து முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“நம்ம சாலை செயலி“ அனைவராலும் பாராட்டப்பட்டு, கொண்டிருக்கின்றது. பொதுமக்கள் மேலும் பாராட்டும்படி உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டு பள்ளமில்லா சாலைகளைப் பாரமரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் 43 இரயில்வே மற்றும் உயர்மட்ட மேம்பாலங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், மேம்பாலங்கள் தரமுடையதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

“தரமான சாலைகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும்“ என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், திட்ட இயக்குநர் எஸ்.ஏ.இராமன், சிறப்பு அலுவலர் (டெக்னிக்கல்) இரா.சந்திரசேகர் மற்றும் தலைமைப்பொறியாளர்கள், கண்காணிப்புபொறியாளர்கள், கோட்டப்பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

### ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு அடிபணியாமல் போராடிய

# தீரன் சின்னமலைக்குப் புகழ் வணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.5-

ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு அடிபணியமாட்டேன், வரி கொடுக்க மாட்டேன் என ஓடா நிலையில் கோட்டை கட்டிப் போராடிய தீரன் சின்னமலைக்கு புகழ் வணக்கம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு அடிபணிய மாட்டேன்; வரி கொடுக்க மாட்டேன் என ஓடாநிலையில் கோட்டை கட்டிப் போராடிய தீரன் சின்னமலை அவர்களுக்குப் புகழ் வணக்கம்.**

**சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை என்று நெஞ்சுரம் காட்டிய தீரருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த சிலைக்கு மலர்வணக்கம் செலுத்தினேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறி ப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் கிழக்கு ஒன்றியம், கோலியனூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணை செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் துவக்கி வைத்து மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய கழக செயலாளர் பி.தெய்வசிகாமணி, ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் இரா.கேசவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.தவமணி, ஒன்றிய கவுன்சிலர்கள் ஜெயலட்சுமி தெய்வசிகாமணி, பச்சையம்மாள் இன்பசேகர், வசந்தி சந்திரசேகரன், தேவி வேலு, ஊராட்சி மன்ற தலைவர்கள் கோமதி மணி, மணிவேல், லதா செந்தில், கவிதா செந்தில், கண்மணி கன்னியப்பன், சந்திரா சக்கரவர்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஸ்ரீதர், ஜெயந்தி ராஜகணேஷ், கிளைச் செயலாளர்கள் சசிகுமார், அய்யனார், சிவகுரு, குணசேகரன், ஹரி கிருஷ்ணன், அர்ஜுனன், ராவணன், சிவராமன், மகாதேவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.